தேதி :18.06.2026

அசல் வழக்கு எண் : 206/2022

பிரதிவாதி தரப்பு சாட்சி 3 : வினோபா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. நான் பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்தேன். நாகராஜ், சுப்ரமணி மீது இந்த வழக்கு தாக்கல் செய்தார். நாகராஜ் தாவா சொத்தில் பாகம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 10 சென்ட் ஆகும். வாதி நாகராஜக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் தாவா சொத்து நாகராஜின் அம்மா சொத்து. நாகராஜின் அம்மா பெயர் புட்டம்மா. நாகராஜின் அம்மாவிற்கு தாவா சொத்து கிரயம் மூலமாக பாத்தியப்பட்டதா என்றால் அவருக்கு தானம் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்டது. நாகராஜின் அம்மா பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்க்கவில்லை. தாவா சொத்தில் ஆர்.சி.சி. வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த ஆர்.சி.சி வீடு அந்த இடத்தில் சுமார் 25 வருடங்களாக நான் பார்த்து வருகிறேன். அந்த ஆர்.சி.சி வீடு யார் கட்டினார்கள் என்று 4வது பிரதிவாதி சுப்ரமணியிடம் நான் கேட்கவில்லை. எனக்கும் அந்த வீடு யார் கட்டினார்கள் என்று தெரியாது. எனக்கு தாவா சொத்து பற்றி எதுவும் தெரியாது என்றாலும், சுப்ரமணி சொல்லி தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து முனுசாமியப்பாவிற்கு பிதுராஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் நாகராஜிக்கு அந்த சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து தான செட்டில்மெண்ட் மூலமாக புட்டம்மாவிற்கு

பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பிதுராஜித சொத்து என்பதால் வாதிக்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல. 4வது பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

SANTHOSH BASKAR

Digitally signed by SANTHOSH BASKAR

Additional District Judge,

Hosur.